(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 4(2).]

# பாராளுமன்றம்

## 4 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2011, ஓகத்து 26, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2011, செத்தெம்பர் 06, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

கரையோரம் பேணல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரால் ஆக்கப்பட்டு 2010 யூன் மாதம் 29 ஆந் திகதிய 1660/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 1991 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, உணவு (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2010 மார்ச்சு மாதம் 24 ஆந் திகதிய 1646/18 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.3),— 1991 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, உணவு (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2010 மார்ச்சு மாதம் 24 ஆந் திகதிய 1646/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.4),— 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதிய 1589/34 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.5),— 1991 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, உணவு (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதிய 1617/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.6),— 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதிய 1694/5 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

நீதி அமைச்சர்,— குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*

கைத்தொழில் பிணக்குகள் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

## 2011, செத்தெம்பர் 08, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1050/ '10

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) தொண்டர் ஆசிரியர்களை, ஆசிரியர் உதவியாளர்களாக நியமனம் செய்வது தொடர்பிலான 2006.10.25 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் கல்வி அமைச்சின் ED/2/20/4/1/47 உப எனும் இலக்க, 2007.02.10 ஆம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்ட அறிவுரைகளுக்கு அமைய, மத்திய மாகாண கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் கோரலுக்கு அமைய கண்டி மாவட்டத்தின் கட்டுகஸ்தொட்டை, கம்பளை, தெல்தெனியா, வத்தேகம, தெனுவர மற்றும் கண்டி ஆகிய கல்வி வலயங்களிலிருந்து முன்வந்திருந்த விண்ணப்பதாரிகளில் 61 பேர் நேர்முகப் பரீட்சையின் போது அப்பதவிக்கு தகுதி பெற்றுள்ளார்கள் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) கல்வி அமைச்சுச் செயலாளரின் ED/2/29/4/1/47 List எனும் இலக்க, 2008.09.08 ஆம் திகதிய கடிதம் மூலம் இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குமாறு மத்திய மாகாண கல்விச் செயலாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) இதுவரை காலம் மேற்படி நியமனங்களை வழங்குவதற்குப் பதிலாக 2010.02.10 ஆம் திகதி ஆசிரியர் பயிற்சிக்கான நிலையங்களுக்கு இணைத்து, கல்வி செயலாளரினால் ED/1/20/6/24 ஆம் இலக்கத்தின் கீழ் கடிதம் அனுப்பப்பட்டுள்ளமை மட்டுமே நடைபெற்றுள்ளது என்பதையும்,

(iii) இந்நிலைமையினால் ஆசிரியர் உதவியாளர் நியமனம் பெறுவதற்குள்ள மேற்படி நபர்கள் தொடர்ந்தும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) அவ்வாறாயின், இவர்களுக்கு ஆசிரியர் உதவியாளர் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2011, செத்தெம்பர் 09, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1534/ '11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) யாழ்ப்பாணம் - நல்லூர் பிரதேச செயலகத்தின் கீழுள்ள பூம்புகார் கிராமத்தின் தனியார் வீடொன்றில் தற்போது பாடசாலையொன்று நடாத்தப்பட்டு வருகின்றதென்பதை அறிவாரா?

(ஆ) 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ள இக் கிராமத்துக் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் எதிர்கால கல்வி மேம்பாட்டினைக் கருத்திற்கொண்டு நிரந்தரப் பாடசாலைக் கட்டடமொன்றை அமைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

1565/ '11

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்பு மற்றும் அதை அண்மித்த பிரதேசங்களுக்கு வெளியே பிரதேச நிருவாகக் கடமையில் ஈடுபடுகின்ற இலங்கை நிருவாகச் சேவையைச் சேர்ந்த மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் ஆகிய பதவிகளை வகிக்கின்ற அரச உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ விடுதிகள் வழங்கப்பட வேண்டுமென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கை நிருவாகச் சேவையின் ஒவ்வொரு தரத்திற்கும் உரிய உத்தியோகத்தர்களுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ விடுதிகள் வகைப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை யாதென்பதையும்;

(ii) இவ்வுத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்காக புதிதாக உத்தியோகபூர்வ விடுதிகள் நிர்மாணிக்கப்படுமாயின் இதற்கென அங்கீகரிக்கப்பட்டதொரு திட்டம் உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி விடுதிகள் வகைப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1535/ '11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாணம் - கிளிநொச்சி பிரதேசங்களில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபைக்கும் இடையில் நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் பெறுபேறுகள் யாவையென்பதையும்,

(ii) யாழ்ப்பாணம் - கிளிநொச்சி குடிநீர்த் திட்டம் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

## 2011, செத்தெம்பர் 20, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0880/ '10

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (6)

(அ) 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை சட்டக் கல்லூரியின் மொத்த வருமானம் தனித்தனியே எவ்வளவென்பதை அவர் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும்,

(i) விரிவுரைக் கட்டணமாக அறவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சைக்கான விண்ணப்பக் கட்டணமாக அறவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பரீட்சையின் பரீட்சைக் கட்டணமாக அறவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) வேறு வழிகளில் இலங்கை சட்டக் கல்லூரிக்கு கிடைத்த வருமானம் எவ்வளவென்பதையும்;

(v) இலங்கை சட்டக் கல்லூரியின் செலவினம் எவ்வளவென்பதையும்

தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கை சட்டக் கல்லூரியின் நிதி முகாமைத்துவத்தை ஒழுங்கு முறைப் படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவை என்பதையும்;

(ii) 2009 ஆம் ஆண்டுக்கான நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விரிவுரைக் கட்டணங்களை அதிகரிக்காது இலங்கை சட்டக் கல்லூரியின் நடவடிக்கைகளைப் பேணிவர முடியாதாவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1165/ '11

கௌரவ அநுர திசாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 1980 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் வரை அரச ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள விதம் வருடாந்த ரீதியில் தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) இக்காலப்பகுதியில் வாழ்க்கைச் செலவு சுட்டெண் அதிகரித்துள்ள விதம் வருடாந்த ரீதியில் தனித்தனியாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) அதிகரிக்கின்ற வாழ்க்கைச் செலவுக்கு ஒப்பீட்டளவில் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கவில்லையென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

1608/ '11

கௌரவ அஜித் பீ.பெரேரா,— உள்ளூராட்சி,மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தின் கெஸெல்வத்த, திக்கல இறங்குதுறைக்கும் கொழும்பு மாவட்டத்தின் பிலியந்தல முனைக்கும் இடையே ஈடுபடுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட படகுப் பாதை பண்டாரகம, ஹிரண இறங்குதுறையிலிருந்து திக்கல இறங்குதுறைக்கு எடுத்துவரப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி படகுப் பாதையை இதுவரை பயன்பாட்டில் ஈடுபடுத்த முடியாமற் போனமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி படகுப் பாதை போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படுவதை ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்;

(iv) படகுப் பாதை பயன்படுத்தப்படுவதற்காக இலக்கிடப்பட்ட திகதியொன்று இல்லாவிட்டால் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

## (2011, செத்தெம்பர் 20, செவ்வாய்க்கிழமை)

1631/ '11

கௌரவ ரஜீவ விஜேசிங்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தின் கீழ், விண்ணப்பமொன்று விடுக்கப்பட்டதன்பேரில் அவ்விண்ணப்பத்தின் மீது விசாரணை முடிவடையும் வரையில் நீதிமன்றம் இடைக்கால பாதுகாப்பு உத்தரவு ஒன்றை பிறப்பிக்கவேண்டும் என்பதையும்;

(ii) அத்தகைய விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு 14 நாட்களுக்குள் அவ் விண்ணப்பம் மீது விசாரணை மேற்கொள்வதற்கான ஓர் உத்தரவை நீதிமன்றம் வழங்க வேண்டும் என்பதையும்;

(iii) ஓர் இடைக்கால பாதுகாப்பு உத்தரவு 12 மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்கு அமுலில் இருக்க வேண்டுமென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) விசாரணை மேற்கொள்ளப்படாத மற்றும் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குப் பின்னர் விசாரணை மேற்கொள்ளப்பட்ட வழக்குகளையும்;

(ii) சட்டத்தைப் பிரயோகிக்கத் தவறிய நீதிவான்களை வழிநடத்துவதற்கு மேற்கொள்ளப்படும் பரிகார நடவடிக்கையையும், தாமத்தால் பாதிக்கப் பட்டோருக்கான நட்டஈட்டையும்;

(iii) இடைக்கால உத்தரவொன்றிக்கான இறுதிக் திகதியொன்று காணப்படாத பட்சத்தில் இடைக்கால உத்தரவு சாரா கட்டளையொன்றிக்கு இறுதித் திகதி யொன்று பெற்றுக்கொள்வதன் காரணங்களையும்;

(iv) மேற்படி முரண்பாட்டை சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1632/ '11

கௌரவ ரஜீவ விஜேசிங்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1841 ஆம் ஆண்டின் அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டத்தின் கீழ் 2001 ஆம் வருடம் முதல் இற்றை வரை கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களது எண்ணிக்கையை வருடாந்த அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) அவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களுள் இன்றும் சிறையில் அல்லது வேறு இடங்களில் தடுத்து வைக்கப்பட்டவர்களது எண்ணிக்கை என்னவென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'திருத்த முடியாத போக்கிரி' (Incorrigible rogues)என்பதன் அர்த்தம் என்னவென்பதையும்;

(ii) அச்சொல் எந்நோக்கத்தின் அடிப்படையில் பிரயோகிக்கப்பட்டது என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) தெருச்சுற்றி கட்டளைச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள், அது அவ்வாறு பிரயோகிக்கப்பட வேண்டும் போன்றன தொடர்பாக 2004 ஆம் ஆண்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் விதப்புரைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) மேற்குறிப்பிடப்பட்ட விதப்புரைகளை துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்,

(ii) அவ்வாறு இல்லையெனில், அக்கட்டளைச் சட்டத்தின் கீழான நடைமுறைகள் சீர்செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்துகொள்வதற்கு மேற்கொள்ளப்படவுள்ள ஏனைய நடைமுறைகள் என்னவென்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

## 2011, செத்தெம்பர் 21, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1377/ '11

கௌரவ வசந்த அலுவிஹாரே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2001ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மாத்தளை சிறிமாவோ பண்டாரநாயக்க மாதிரி ஆரம்பப் பாடசாலையுடன் இணைக்கப்பட்டு தற்போது இரண்டாம் நிலைப் பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதையும்;

(ii) மேற்படி இரண்டாம் நிலைப் பிரிவு தொடர்பாக பெற்றோர் மத்தியில் குழப்பமான நிலைமையொன்று காணப்படுவதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையின் இரண்டாம் நிலைப் பிரிவுக்காக நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடம் தொடர்பான முழுமையான தகவல்கள் அடங்கிய அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) மேற்படி கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு செலவு செய்யப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் முழுமையாக நிறைவுச் செய்யபப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆரம்ப நிலைப் பிரிவுக்கும் இரண்டாம் நிலைப் பிரிவுக்குமிடையிலான தூரம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) (i) இவ்விரண்டு பிரிவுக்கிடையிலும் நிர்மாணிக்கப்படும் பிரவேசப் பாதையில் பாலம் அமைத்தல், படிக்கட்டுகளை அமைத்தல், மற்றும் பாதைக்கு கொங்கிரீட் இட்டு செப்பனிடல் போன்றவற்றுக்காக செலவுச் செய்யப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி பாதையின் நிர்மாணப் பணிகள் உரிய தரத்தை கொண்டுள்ளனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) மேற்படி பாடசாலையின் இரண்டாம்நிலைப் பிரிவை வேறு பெயரில் அழைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அப் பெயர் யாதென்பதையும்;

(iii) இரண்டாம்நிலைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ள இடத்தில் பிள்ளைகளுக்கு போதிய பாதுகாப்பு உண்டா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0977/ '10

கௌரவ எம்.ரீ.ஹசன் அலி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (6)

(அ) (i) கல்வி அமைச்சினால் குறைந்த வசதிகளைக் கொண்ட பாடசாலைகளாக இனங்காணப்பட்டுள்ள மாகாண சபைகள் மற்றும் மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இப்பாடசாலைகளில் முஸ்லிம் பாடசாலைகள் மற்றும் தோட்டப் பாடசாலைகளின் எண்ணிக்கை தனித்தனியே யாவையென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலைகளின் வளர்ச்சிக்காக எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் மாவட்ட மட்டத்தில் தனித்தனியே யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஆ) இன்றேல், ஏன்?

1378/ '11

கௌரவ வசந்த அலுவிஹாரே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சீ (C) வகைப் பாடசாலைகளில் அதிபர் பதவிக்கு இலங்கை அதிபர் சேவையின் தரம் 1 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களை நியமிக்கவேண்டும் என்பதையும்;

(ii) அவ்வாறல்லாத சந்தர்ப்பங்களில் அதிபர் சேவையின் தரம் 2ஐச் சேர்ந்த ஒருவரை நியமிக்க வேண்டும் என்பதையும்;

(iii) எனினும், மாத்தளை கல்வி வலயத்தினுள் C வகைப் பாடசாலைகள் சிலவற்றில் அதிபர் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஆசிரியர் சேவையில் உள்ளவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) C வகைப் பாடசாலைகளில் அதிபர் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஆசிரியர் சேவையில் உள்ள ஒருவர் நியமிக்கப்படுவதை அனுமதிக்கிறீர்களா என்பதையும்;

(ii) இன்றேல், அவ்வாறானதொரு நியமனம் தொடர்பாக எடுக்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) தற்போது (அ)(iii) இல் தெரிவிக்கப்பட்டுள்ள நியமனங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ள அடிப்படை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) அதிபர் சேவையில் தரம் 1ஐச் சேர்ந்த உத்தியோகத்தரான திருமதி ஆர்.எம். யு. எஸ்.எஸ். ராஜகருணாவுக்கு பாடசாலையொன்றை வழங்காது கல்விக் காரியாலயத்திற்கு இணைக்கப்பட்டுள்ளாரென்பதை அவர் அறிவாரா?

(ஈ) ஆமெனில், மேற்படி அதிபருக்கு நீதியை நிலைநாட்ட எடுக்கும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

# 2011, செத்தெம்பர் 22, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1628/ '11

கௌரவ அனுர திசாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2002 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை கல்வியியல் கல்லூரிகளிலிருந்து வெளியேறிய ஆசிரியர்களில் மேல்மாகாணத்தில் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்ட போதிலும் தற்போது வடமத்திய மாகாணத்தில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பாடத்திற்கும் அமைவாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர்கள் வட மத்திய மாகாணத்திலிருந்து விடுவிக்கப்பட்டு தாம் வதியும் பிரதேசங்களுக்கு இடமாற்றம் பெறுவதற்காக, இவர்கள் சார்பில் வேறு ஆசிரியர்களை மேற்படி மாகாணத்திற்கு அமர்த்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) கஷ்டப் பிரதேச சேவையை நிறைவு செய்த மேற்கூறிய ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை கருத்திற்கொண்டு வழங்கப்பட்டுள்ள இடமாற்றங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) இதுபோன்ற கோரிக்கைகளின் அடிப்படையில் இடமாற்றங்கள் வழங்கப்படாத ஆசிரியர்களின் கோரிக்கைகள் தொடர்பில் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ள தலையீடுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1536/ 11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ. எச். எம். அஸ்வர்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நுவரெலியா மாவட்டத்தில் மஸ்கெலியா நகரில் உள்ள வடிகால் முறைமை 40 வருடங்கள் பழமைவாய்ந்தவை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) எத்தகைய திருத்தமும் மேற்கொள்ளப்படாமையினால் பழுதடைந்துள்ள இந்த வடிகால் முறைமையிலிருந்து அழுக்கு நீர் வெளியே வடிந்தோடுவதன் காரணமாக வீசுகின்ற துர்நாற்றத்தினால் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என்பதையும்;

(ii) இந் நிலைமை பிரதேச மக்களின் சுகாதாரத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதையும்

அவர் ஏற்றுக்கொள்கிறாரா?

(இ) மாவுஸ்சாகெலே நீர்த்தேக்கம் நிர்மாணிக்கப்பட்டபோது நீரில் மூழ்கிய மஸ்கெலிய பழைய நகரத்துக்குப் பதிலாக 1968 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட மஸ்கெலியா புதிய நகரில் உள்ள இந்த வடிகால் முறைமையின் திருத்தப் பணிகளை ஆரம்பிக்குமாறு குறிப்பிட்ட அதிகாரிகளுக்கும், உள்ளூராட்சி மன்றத்துக்கும், மாகாண சபைக்கும் பணிப்புரை வழங்குவாரா என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1630/ '11

கௌரவ அனுர திஸாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்து சபைக்கு குத்தகை அடிப்படையில் கொடுப்பனவுகளைச் செய்யும் பொருட்டு கொள்வனவு செய்யப்பட்ட பஸ்வண்டிகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பஸ் வண்டிகள் வரவழைக்கப்பட்ட திகதிகள் மற்றும், அந்த ஒவ்வொரு திகதியிலும் வரவழைப்பட்டுள்ள பஸ் வண்டிகளின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வரவழைக்கப்பட்ட ஒரு பஸ் வண்டியின் விலை எவ்வளவு என்பதையும்;

(ii) மாதாந்தம் ஒரு பஸ் வண்டிக்கு செலுத்த வேண்டிய தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) குத்தகை அடிப்படையில் பஸ் வண்டிகளை கொள்வனவு செய்கின்ற போது கேள்விப் பத்திர நடைமுறைகள் பின்பற்றப்பட்டனவா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2011, செத்தெம்பர் 23, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1539/ '11

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஹபராதுவ கோட்டக் கல்விப் பிரிவுக்குட்பட்ட புஸ்செல்கட மாதிரி கனிஷ்ட வித்தியாலயத்தில் 2003ஆம் ஆண்டு தொடக்கம் 2010ஆம் ஆண்டு வரையான ஒவ்வோர் ஆண்டின் ஆரம்பத்திலும்,

(i) அந்தந்த தரங்களிலிருந்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) முதலாம் தரத்திற்கு விண்ணப்பித்திருந்த மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2004ஆம் ஆண்டின் பின்னர் மேற்படி பாடசாலை முன்னேற்றம் கண்டுள்ளதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) அந்த முன்னேற்றத்திற்கு காரணமான விடயங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1542/ '11

கௌரவ வசந்த அலுவிஹாரே,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தளை மாவட்டத்தில் தம்புல்ல பிரதேச செயலாளர் பிரிவுக்குச் சொந்தமான தம்புல்ல நகர மத்தியில் ஓடும் தம்மென்னா கால்வாயை விரிவாக்குவதற்கான நடவடிக்கைகள் நடைபெறுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்கருத்திட்டத்திற்கென மதிப்பீடு செய்யப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்;

(ii) இக்கருத்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனம் யாதென்பதையும்;

(iii) தம்மென்னா கால்வாய் விரிவாக்கல் தொடர்பாக பிரதேசவாசிகள் அறிவூட்டப்பட்டனரா என்பதையும்;

(iv) கால்வாய் விரிவாக்கப்படுவதனால் கால்வாயின் இருபக்கத்திலுமுள்ள பெரும்பாலான குடியிருப்பாளர்களின் உரித்துரிமைக் காணித் துண்டுகளையும் இக்காணிகளிலிருந்த பெறுமதிமிக்க மரங்களையும் இழந்துள்ளனர் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) அவ்வாறாயின் இக்குடியிருப்பாளர்களுக்கு இதற்கான நட்டஈடொன்றை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(vi) நட்டஈடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமாயின் அதற்குத் தேவைப்படும் காலம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1616/ '11

கௌரவ மொஹமட் அஸ்லம்,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தின் கெகிராவ, கனேவல்பொல பிரதேசத்தில் கடுமையாக குடிநீர் பற்றாக்குறை நிலவுகின்றதென்பதையும்;

(ii) அப்பிரதேசத்தின் ஊற்று நீர் மற்றும் கிணற்று நீர் குடிப்பதற்கு உகந்ததல்ல என சுகாதார உத்தியோகத்தர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) கலாவெவ நீர் விநியோகத்திட்டத்தின் கீழ், நீர் குழாயிடல் பணிகள் மேலே குறிப்பிட்டுள்ள பிரதேசத்தின் கிராமங்களை உள்ளடக்குகின்றவாறு விஸ்தரிக்கப்படாமையினால் அப்பிரதேச மக்கள் சுத்தமான குடி நீரைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை இழந்துள்ளார்கள் என்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(இ) ஆமெனில், அம்மக்களின் குடி நீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக துரிதமான தீர்வொன்றைப் பெற்றுக்கொடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

## (2011, செத்தெம்பர் 23, வெள்ளிக்கிழமை)

1540/ '11

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஹபராதுவ கோட்டக் கல்விப் பிரிவுக்குட்பட்ட ஹருமல்கொடை மேற்கு கனிஷ்ட வித்தியாலயத்தில் 2003 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரையான ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலும்,

(i) அந்தந்த தரங்களில் இருந்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) முதலாம் தரத்துக்கு விண்ணப்பித்திருந்த மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2004 ஆம் ஆண்டுக்கு பின்னர் மேற்படி பாடசாலை முன்னேற்றமடைந்துள்ளதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) அம்முன்னேற்றத்துக்கு காரணமான விடயங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2011, ஒற்றோபர் 04, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1230/ '11

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2011, ஒற்றோபர் 05, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1231/ '11

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1204/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரை ஒவ்வொரு வருடத்திலும் இலங்கைக்குள்ளே சட்ட விரோதமாக எடுத்து வந்த வேளையில் கைப்பற்ற போதைப் பொருட்களின் (ஹெரொயின் போன்றவை) அளவு தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி சட்டவிரோத போதைப் பொருட்களை இந்நாட்டுக்கு வரைவழைத்த ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) சட்ட விரோத போதைப்பொருட்களை எடுத்துவரல் சம்பந்தமாக ஓர் ஆளிடமிருந்தோ அல்லது நிறுவனத்திடமிருந்தோ அறவிடப்பட்ட அபராதத் தொகை தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி போதைப்பொருட்கள் வரவழைக்கப்பட்ட நாடுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1234/ '11

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1205/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பிற்குச் சொந்தமான இதுவரை இலங்கைக்கு கொண்டுவரப்பட்டிராத கப்பல்கள் தற்போது தரித்து வைக்கப்பட்டுள்ள அல்லது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நாடுகள் யாவை என்பதையும்;

(ii) அக் கப்பல்களை இலங்கைக்கு வரவழைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில் அத்தினம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1235/ '11

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

# 2011, ஒற்றோபர் 06, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0960/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழிநுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் உபயோகத்திலுள்ள தொலைபேசி வலையமைப்புகளினூடாக மேற்கொள்ளப்படும் உரையாடல்களை செவிமடுப்பதற்கு அல்லது பதிவு செய்வதற்கான உபகரணத்தொகுதியொன்றை அரசு அல்லது ஏதாவதொரு நிறுவனம் இந்நாட்டிற்கு கொண்டு வந்து அல்லது நிறுவி உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதன் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iii) குறித்த உபகரணத்தொகுதியினால் உள்வாங்கப்படும் தொலைபேசிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) அவ்வாறான உபகரணத்தொகுதியொன்றைக் கொண்டு வந்துள்ளதன் நோக்கம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1236/ '11

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக கமத்தொழில் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1207/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரின் போது இலங்கைக்குள்ளே தொலைக்காட்சி மற்றும் வானொலி ஒளி/ஒலி பரப்புவதற்கான உரிமையைப் பெற்ற இந்நாட்டு ஊடக நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி உரிமைக்காக விண்ணப்பித்த ஏனைய ஊடக நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நிறுவனமும் சமர்ப்பித்த விலை மனுக்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஒளி/ஒலி பரப்பு உரிமை வழங்கப்பட்ட ஊடக நிறுவனங்களால் அதற்காக செலுத்தப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1239/ '11

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சமூக சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக சமூக சேவைகள் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1208/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சூரியவெவ மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு அரங்கில் 2011.02.19 ஆம் திகதி நடைபெற்ற கனடா - ஸ்ரீலங்கா உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியைப் பார்வையிட வந்த பார்வையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இப்போட்டியைப் பார்வையிடுவதற்காக ஒவ்வொரு விலையிலும் விற்பனை செய்யப்பட்ட அனுமதிச் சீட்டுக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இந்த அனுமதிச் சீட்டு விற்பனையினால் கிடைத்த வருமானம் எவ்வளவு என்பதையும்;

(iv) இவ்விளையாட்டரங்கில் பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2011, ஒற்றோபர் 07, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1041/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நீர்வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) உலக வங்கி உதவியின் கீழ் செயற்படுத்தப்படும் கிராமிய மட்ட சமூக நீர்ப்பாசனக் கருத்திட்டத்துக்குக் கிடைத்த உதவித் தொகை எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இக்கருத்திட்டத்தின் கீழ் நிறைவு செய்யப்பட்டுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) நிறைவு செய்யப்பட்டுள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள் அமைந்துள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மற்றும் சம்பந்தப்பட்ட பிரதேசச் செயலாளர் பிரிவுகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை வேலைகள் நிறைவு செய்யப்படாதுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இவ்வாறு வேலைகள் நிறைவு செய்யப்படாதுள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள் அமைந்துள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மற்றும் சம்பந்தப்பட்ட பிரதேசச் செயலாளர் பிரிவுகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(v) கிராமிய மட்ட சமூக நீர்ப்பாசனத் திட்டம் முடிவடையும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1209/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இதுவரை இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ள நிதி நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இந்நிதி நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மத்திய வங்கிக்கு அறிக்கையிடப்பட்டுள்ள பதிவு செய்யப்படாமல் பேணிவரப்படுகின்ற நிதி நிறுவனங்கள் உள்ளனவா என்பதையும்;

(iv) அவ்வாறாயின் அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(v) இந்த பதிவு செய்யப்படாத நிதி நிறுவனங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1313/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெஹிவளையில் அமைந்துள்ள விலங்கினக் காட்சிச்சாலையினை பின்னவலவுக்கு எடுத்துச் செல்லத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள காணியின் அளவு யாதென்பதையும்;

(iii) ஏற்கனவே அக்காணி சுவீகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) தெஹிவளையில் அமைந்துள்ள விலங்கினக் காட்சிச்சாலையினை பின்னவலவுக்கு மாற்றும் பொருட்டு செலவிட எதிர்பார்த்துள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(v) மேற்படி இடமாற்றத்தை மேற்கொள்வதில் தாக்கமேற்படுத்திய காரணங்கள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தேச விலங்கினக் காட்சிச்சாலையின் இடமாற்றம் தற்போது பழக்கப்பட்ட சுற்றாடல் நிலைமையைப் பார்க்கிலும் வித்தியாசமான நிலைமைக்கு விலங்குகளை இட்டுச் செல்ல காரணமாக அமையுமென்பதையும்;

(ii) இந்நிலைமை காரணமாக விலங்கினக் காட்சிச்சாலையில் உள்ள விலங்குகளின் வாழ்க்கை இடர் நேர்வுக்கு இலக்காகின்றதென்பதையும்

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) விலங்கினக் காட்சிச் சாலையின் இடமாற்றம் காரணமாகத் தோன்றுகின்ற மேற்படி இடர் நேர்வு நிலைமை தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2011, ஒற்றோபர் 18, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0756/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) தற்போது ஆசிரியர் பணியில் ஈடுபட்டிருக்கும் கல்வியியல் கல்லூரிகளிலிருந்து வெளியேறிய கற்பித்தல் டிப்ளோமாதாரிகளின் எண்ணிக்கையையும்,

(ii) மேற்படி கற்பித்தல் டிப்ளோமாதாரிகளில் கலைமானிப் பட்டம், விஞ்ஞானமானிப் பட்டம், பட்டப்பின்படிப்பு மற்றும் முதுகலைமானிப்பட்டம் ஆகிய பட்டக் கற்கை நிலைகள் வரை உயர்கல்வி பயின்றுள்ளவர்களின் எண்ணிக்கையையும்,

(iii) பெற்றுக் கொண்டுள்ள பட்டப்படிப்புகளுக்கமைய ஆசிரியர் சேவையின் அந்தந்த தரங்களுக்கு கற்பித்தல் டிப்ளோமாதாரிகள் நியமிக்கப் பட்டுள்ளார்களா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சப்ரகமுவ மாகாண சபையின் கீழ் பணியாற்றும் கற்பித்தல் டிப்ளோமாதாரி ஆசிரியர்கள் பட்டம் பெற்றிருப்பார்களானால், இவர்களின் நியமனங்களை பட்டதாரி ஆசிரியர் நியமனங்களாக கருதி ஆசிரியர் சேவையில் உரிய தரங்களில் அமர்த்துவதற்கான சுற்றுநிருபமொன்று மேற்படி மாகாண சபையினால் வெளியிடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(இ) ஏனைய கற்பித்தல் டிப்ளோமாதாரிகள் பெற்றுள்ள பட்டப்படிப்புகளுக்கமைய ஆசிரியர் சேவையில் பதவி உயர்வு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0842/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2010, ஐக்கிய நாடுகள் மாநாட்டில் கலந்துகொண்ட சனாதிபதி உள்ளிட்ட குழுவில் உள்ளடங்கிய அங்கத்தவர் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி மாநாட்டுக்காக ஒரு நாட்டுக்குக் கிடைக்கின்ற உத்தியோகபூர்வ அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) மேற்படிகுழு தங்கியிருந்த இடத்தின் பெயர் யாதென்பதையும்,

(iv) மேற்படி பயணத்துக்கு செலவான மொத்தப் பணத்தொகை யாதென்பதையும்,

(v) இச் செலவை பொறுப்பேற்பது யாரென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி மாநாட்டுக்கு, ஐக்கிய நாடுகள் அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் ஏனைய நாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட பிரதிநிதிகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு நாட்டுக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1023/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) இலங்கையில் பணவீக்கத்தை கணிப்பிடுவதற்காக தற்போது பயன்படுத்தப் படுகின்ற முறைமையியல் திருப்தியடையக்கூடிய மட்டத்தில் உள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் எவை என்பதையும்,

(ii) மேற்படி நடவடிக்கைகள் மூலம் போதியளவில் பணவீக்கம் கட்டுப்படுத்தப் படுகின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1314/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை இராணுவத்தில் பணிபுரிகின்ற நிரந்தர மற்றும் அமய சிவில் ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) இவ்வூழியர்களுக்கு ஒரு மாதத்தில் மேலதிக நேரக் கொடுப்பனவாக வழங்கப்படும் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) 2011 சனவரி மாதம் தொடக்கம் இதுவரை இந்த ஊழியர்களுக்கு உரிய முறையில் மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளதாக யாதென்பதையும்;

(iv) இன்றேல் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) 2011 சனவரி மாதம் தொடக்கம் இற்றைவரை செலுத்தப்படாதுள்ள மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1026/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2008, 2009, 2010 ஆகிய வருடங்களில் இலங்கைக்கு வெளிநாட்டு முதலீடுகளாக கிடைத்த நிதித் தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி வருடங்களில் போதுமானளவு வெளிநாட்டு முதலீடுகள் இலங்கைக்கு கிடைத்தனவா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1315/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி முகத்திடலில் அமைந்துள்ள இலங்கை இராணுவத் தலைமையகத்தை அகற்றி அது அமைந்துள்ள காணியை வெளிநாட்டுக் கம்பனியொன்றுக்கு விற்பனை செய்வதற்கு அல்லது குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) குத்தகை அல்லது நிரந்தர அடிப்படையில் வழங்கப்பட்டிருப்பின், அவ்வாறு வழங்கப்பட்டுள்ள கால எல்லை யாதென்பதையும்;

(iii) மேற்படி காணி வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டுக் கம்பனியின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காணி வழங்குதல் தொடர்பான உடன்படிக்கையை சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2011, ஒற்றோபர் 19, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0931/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) தென் மாகாணத்தின் பாடசாலைகளில் தற்போது சுமார் பத்து வருட காலமாக தொண்டர் அடிப்படையில் கடமையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் சிலர் எவ்விதமான கொடுப்பனவையும் பெறாது கடமையாற்றுகின்றனரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறு கடமையாற்றுகின்ற ஆசிரியர்களின் பெயர்கள் மற்றும் எண்ணிக்கை, கல்வி வலய மட்டத்தில் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர்கள் எத்தகைய பாடங்களை கற்பிப்பதற்காக ஆட்சேர்க்கப்பட்டனர் என்பதையும்;

(iii) அவர்கள் ஆட்சேர்க்கப்பட்ட நடைமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) நாட்டின் வேறு மாகாணங்களில் கடமையாற்றிய தொண்டர் ஆசிரியர்கள் ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ளனரென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) ஆமெனில், தென் மாகாணத்தின் தொண்டர் ஆசிரியர்களை ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அதற்காக எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1091/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாதாந்தம் ரூபா. 1000/- இற்கு குறைந்த சமுர்த்தி நிவாரணம் பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2010 ஆம் ஆண்டில் சமுர்த்தி நிவாரணங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணத் தொகை யாதென்பதையும்;

(iii) 2011 ஆம் ஆண்டில் சமுர்த்தி நிவாரணங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மஹிந்த சிந்தனையில் குறிப்பிட்டுள்ளவாறு,

(i) ரூபா. 1000/- இற்குக் குறைவாக சமுர்த்தி நிவாரணம் பெறுகின்ற அனைத்து குடும்பங்களினதும் சமுர்த்திக் கொடுப்பனவு ருபா 1000/- வரை அதிகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மூன்று வயதுக்குக் குறைந்த குழந்தைகள் உள்ள அனைத்துக் குடும்பங்களினதும் குழந்தைகளுக்காகவும் ருபா. 1500/- மேலதிக நிவாரணத்தை வழங்குவதற்கு நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்,

(iii) அனைத்து சமுர்த்தி குடும்பங்களுக்கும் ஏதேனும் முயற்சியில் அல்லது தொழிலில் ஈடுபடுவதற்குத் தேவையான மூலதனத்தைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டு ருபா. 100,000/- வரையிலான கடன் தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1040/ '10

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் வறுமையை ஒழிப்பதற்காக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் எவை,

(ii) இச்செயற்பாட்டில் உள்ளடங்கும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) வறுமையை ஒழிப்பதற்கான இலக்குகள் தற்போதைய அரசின் நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1316/11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு ஹில்டன் ஹோட்டல் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) இதை அரசாங்கம் சுவீகரித்தமைக்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரசாங்கம் இந்த ஹோட்டலை மீண்டும் விற்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், இதற்காக தீர்மானிக்கப்பட்டுள்ள பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iii) இதனை கொள்வனவு செய்கின்ற நபர் அல்லது நிறுவனம் யாதென்பதையும்;

(iv) மேற்படி கொடுக்கல்வாங்கல் இடம்பெறுவது குத்தகை அடிப்படையிலா அல்லது நிரந்தர அடிப்படையிலா என்பதையும்;

(v) மேற்படி கொள்வனவு எவ்வளவு காலத்திற்கு நடைமுறையிலிருக்குமென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1274/ '11

கௌரவ புத்திக பத்திரண,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் கம்புறுபிட்டிய பிரதேச செயலக ஆளுகைப் பிரிவில் அமைந்துள்ள சுமார் நூற்றி ஐம்பது ஏக்கர் வயல்களுக்கு நீர் வழங்குகின்ற வேகெவில அணைக்கட்டு உரிய முறையில் பராமரிக்கப்படுவதில்லை என்பதையும்;

(ii) இதனால் தமது பயிர்ச் செய்கைக்குத் தேவையான நீரை பெற்றுக் கொள்ள முடியாமல் இப் பிரதேச விவசாயிகள் கடும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா ?

(ஆ) (i) வேகெவில அணைக்கட்டை துரிதமாக புனரமைத்து விவசாயிகளின் நீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அதற்காக தற்போது நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில் அத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படுமெனில், அத்திகதி என்னவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன் ?

1317/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிவில் விமான சேவைகள் அமைச்சு தற்போது எந்த இடத்தில் பேணிவரப்படுகின்றது என்பதையும்;

(ii) இந்த இடமானது நிரந்தர அல்லது குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருப்பின் அதற்காக மாதாந்தம் செலுத்தப்படும் பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சிவில் விமான சேவைகள் அமைச்சினை வேறொரு இடத்திற்குக் கொண்டு செல்வதற்கான வேலைத்திட்டமொன்று நடைமுறையில் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்தப் புதிய இடம் யாதென்பதையும்;

(iii) இந்த இடமானது குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்காக மாதாந்தம் செலுத்த வேண்டிய பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) இந்த இடமானது குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ள காலப்பகுதி யாதென்பதையும்;

(vi) இக்கட்டிடத்தின் உரிமையாளர் யார் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், என்?

# 2011, ஒற்றோபர் 20, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

0957/ '10

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மாத்தறை மாவட்டத்தின் திஹகொட பிரதேச செயலாளர் பிரிவில் கொடமக சந்தியிலிருந்து வெல்தொட்ட வரையிலான வீதி பல வருடங்களாக திருத்தப்படாமையின் காரணத்தால் மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்வீதி எந்த நிறுவனத்திற்கு சொந்தமானதென்பதையும்,

(ii) இவ்வீதியை போக்குவரத்திற்கு பொருத்தமான விதத்தில் திருத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனில், இப்பணிகளை எப்போது ஆரம்பித்து எப்போது பூர்த்திசெய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இப்பாதையை அபிவிருத்தி செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(ii) இப்பணத்தொகை ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1064/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதித் திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009, 2010, 2011 இற்றைவரைக்கும் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள், மானியங்களை தனித்தனியாகவும் மொத்தமாகவும் எவ்வளவு என்பதையும்;

(ii) மேலே கூறப்பட்டவாறு பெறப்பட்ட கடன்கள் மானியங்கள் எக் கருத்திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) பெறப்பட்ட கடன்களின்,

(i) அனைத்தும் உள்ளடங்கிய சராசரி வட்டி வீதம் எவ்வளவு என்பதையும்;

(ii) கடன் காலப்பகுதி எவ்வளவு என்பதையும்;

(iii) கடன் காலப்பகுதியின் முடிவில் மொத்த வட்டி மற்றும் கடன் கட்டணம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1318/ '11

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி முகத்திடலில் அமைந்துள்ள இலங்கை இராணுவ தலைமையகம் தற்போது அந்த இடத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அதற்கான காரணம் என்ன என்பதையும்;

(iii) தற்போது இராணுவத் தலைமையகம் எந்த இடத்தில் இயங்கி வருகின்றது என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது இராணுவ தலைமையக பணிகளுக்காக வாடகை அடிப்படையில் கட்டிடங்கள் பெறப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அந்த இடங்கள் எவை என்பதையும்;

(iii) அந்ந ஒவ்வொரு இடத்தினதும் உரிமையாளர்களின் பெயர்கள் முகவரிகள் மற்றும் மாதாந்த வாடகை வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1276/ '11

கௌரவ புத்திக பத்திரண,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தில் ஹிக்கடுவ பஸ் தரிப்பு நிலையத்தின் கூரை மற்றும் உபகரணங்கள் அழிவடைந்து வருகின்றதென்பதையும்;

(ii) இந்நிலைமையானது ஹிக்கடுவ பிரதேசத்தில் பேணிவரப்படுகின்ற உல்லாசப் பிரயாணக் கைத்தொழிலின்பால் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளை கவர்ந்திழுப்பதற்கு தடையாக அமைந்துள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பஸ் தரிப்பு நிலையத்தை புனரமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், தற்போது இதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) பஸ் தரிப்பு நிலையத்தின் புனரமைப்பு நடவடிக்கைகள் எத்திகதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1343/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகரகம நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தலவத்துகொட நகரில் நிர்மாணிக்கப்படும் பசுமைப் பூங்கா மற்றும் விளையாட்டுத் திடலுக்காக ஒதுக்கப்பட்ட காணியின் பரப்பளவு ஏக்கர்களில் எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிர்மாணத்திற்காக ஒதுக்கப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது மேற்படி நிர்மாணிப்புகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், இன்றளவில் மேற்படி நிலம் எந்த நடவடிக்கைக்காக பயன்படுத்தப் படுகிறதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) விளையாட்டுத் திடல் மற்றும் பசுமைப் பூங்காவிற்கு ஒதுக்கிய காணி பிரிதொரு தேவைக்காக பயன்படுத்தப்படுமாயின் பசுமைப் பூங்கா மற்றும் விளையாட்டுத் திடலுக்காக ஒதுக்கிய பணத் தொகை எதற்காக பயன்படுத்தப்பட்டதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1284/ '11

கௌரவ புத்திக்க பத்திரன,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை - கொழும்பு கடுகதி நெடுஞ்சாலையில் மாத்தறை புகுவழியான கொடகமவை சிறு நகரமாக அபிவிருத்திசெய்யும் திட்டம் ஏதும் உள்ளதா;

(ii) அவ்வாறெனின் அதற்காக சுவீகரிக்கப்படவுள்ள காணியின் பரப்பளவு எவ்வளவு;

(iii) அந்த சொத்துக்களுக்காக நட்டஈடுகள் செலுத்தப்படுமா;

(iv) நட்டஈடு பணமாக வழங்கப்படுவதாக இருப்பின், ஒரு பர்ச்சஸுக்கு செலுத்தப்படும் தொகை எவ்வளவு;

(v) சுவீகரிக்கப்பட்ட வீடுகள் மற்றும் காணிகளுக்காக புதிய வீடுகள் மற்றும் காணிகள் வழங்கப்படுவதாக இருப்பின், அவற்றை அந்த பிரதேசத்தில் உருவாகின்ற அபிவிருத்தியின் பயன்களை இலகுவாக பெறக்கூடிய இடங்களில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா;

(vi) தற்போது காணிகள் மற்றும் வீடுகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ள பிரதேசங்கள் எவை;

(vii) அந்தக் காணிகள் மற்றும் வீடுகளை குறிப்பிட்ட நபர்களுக்கு வழங்கும் கால வரையரை யாது

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2011, ஒற்றோபர் 21, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0479/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் வகிபாகம் யாதென்பதையும்;

(ii) பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் விசாரிக்கப்பட்டு வரும் சட்ட விரோத கொடுக்கல் வாங்கல் விவகாரங்களின் எண்ணிக்கையையும்;

(iii) விசாரணை மேற்கொள்ளப்பட்ட வழக்குகள் மற்றும் அவற்றின் பெயர்கள் என்பவற்றையும்;

(iv) விசாரணைகளின் இற்றை வரையிலான பெறுபேறுகள் யாதென்பதையும்;

(v) வழக்குகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளனவா அல்லது அபராதம் விதிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) விதிக்கப்பட்ட அபராதத் தொகைகளையும் ஒவ்வொரு வழக்கும் எப்போது தீர்த்து வைக்கப்பட்டது என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0956/ '10

கௌரவ புத்திக பத்திரண,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலநோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை பிரதேச செயலகப் பிரிவின், மாத்தறை பம்புரண, சுமணசார மாவத்தை 35 B இலக்கத்தில் வசிக்கும் திருமதி சாந்தி பிரேமரத்ன சவூதி அராபியில் வேலை வாய்ப்புக்காக 2007.11.19 ஆம் திகதியன்று வெளிநாட்டுக்குச் சென்றுள்ளாரென்பதையும்;

(ii) தற்போது மூன்று வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள போதிலும், இவரைப் பற்றிய எவ்வித தகவலும் கிடைக்கவில்லை என்பதையும்;

(iii) இது சம்பந்தமாக இவரது கணவரான திரு. சுசில் பிரேமரத்ன மாத்தறையிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் முறைபாடு செய்துள்ள போதிலும் அதற்கு இற்றை வரை எவ்விதமான பதிலும் கிடைக்கவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா ?

(ஆ) (i) திருமதி சாந்தி பிரேமரத்ன பற்றி தேடிப் பார்த்து அவரை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன்?

1197/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த 5 வருடங்களுக்கான,

(i) முட்டையின் மொத்த மற்றும் தலாவீத நுகர்வையும்;

(ii) இலங்கையில் முட்டை உற்பத்திக்கான செலவையும்;

(iii) இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளின் தொகையையும்;

(iv) இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளின் பெறுமதியையும்;

(v) முட்டை இறக்குமதியாளர்களுக்கு உண்மையில் வழங்கப்பட்ட மாணியத்தையும்

வருடாந்த அடிப்படையில் அவர் அறிவிப்பாரா?

(ஆ) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட முட்டைகள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் ஆகியவற்றுக்கு விதிக்கப்பட்ட சகல வரிகளையும் (நேரடி, மறைமுக) எவ்வளவு என்பதை வெவ்வேறாக அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1285/ '11

கௌரவ புத்திக்க பத்திரண,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை-கொழும்பு புகையிரதப் பாதையின் அபிவிருத்திப் பணிகளுக்காக எத்தனைக் கட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) அந்தக் கட்டங்களில் காலிக்கும் மாத்தறைக்கும் இடையிலான புகையிரத பாதை அபிவிருத்திக் கட்டத்தை தவிர ஏனைய கட்டங்களுக்காக வெவ்வேறாக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) அந்த நிதியை வழங்கும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனங்கள் எவை என்பதையும்;

(iv) வெளிநாட்டிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் கடன் தொகையாக இருப்பின் அதற்காக அறவிடப்படும் வட்டி வீதம் எவ்வளவு என்பதையும்;

(v) அந்தக் கடனைச் செலுத்தி முடிக்க வேண்டிய கால எல்லை என்ன என்பதையும்;

(vi) கடன்தொகை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் எவை என்பதையும்

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) புகையிரதப் பாதை அபிவிருத்தி செய்யப்பட்டதன் பின்னர் புகையிரத போக்குவரத்தில் ஏற்படும் வினைத்திறன் எத்தனை வீதத்தால் அதிகரிக்கும் என்பதை அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1379/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எந்த அதிகாரபீடத்தின் கீழ் சட்டமா அதிபர் திணைக்களம் இயங்குகின்றது என்பதையும்;

(ii) சட்டமா அதிபர் திணைக்களத்திற்காக வருடாந்தம் மேற்கொள்ளப்படும் ஒதுக்கீடுகளையும்;

(iii) திணைக்களத்திலுள்ள பணியாள் தொகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கையினையும்;

(iv) மேற்குறிப்பிடப்பட்டுள்ள பணியாள் தொகுதி உறுப்பினர்கள் பணியாற்றும் ஒவ்வொரு பிரிவு பற்றிய விபரங்களையும்;

(v) சட்டமா அதிபர் தொடங்கி அவருக்குக் கீழே வரும் மிகவும் சிரேஷ்ட அரச சட்டத்தரணிகள் 15 பேரின் பெயரினை மூப்புரிமையின் ஒழுங்கிலும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சட்டமா அதிபரை நியமிப்பதானது சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து மேற்கொள்ளப்படுகின்றதா அல்லது வெளியில் இருந்து மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) வெளியிலிருந்து மேற்கொள்ளப்படுவதாயின் தெரிவு நிபந்தனைகளையும்

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

கௌரவ புத்திக பத்திரண,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தின் குறுவிட்ட வடக்கு எக்னெலிகொட சமூக நீர்வழங்கல் திட்டம் இற்றைக்கு 13 ஆண்டுகளுக்கு முன்னர் உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட ஒரு கருத்திட்டமாகும் என்பதையும்;

(ii) மேற்படி நீர் வழங்கல் கருத்திட்டத்தில் காணப்படும் வினைத்திறனின்மை காரணமாக அதன் மூலம் நீர்வசதியைப் பெறும் பிரதேச மக்கள் பாரிய குடிநீர்ப் பற்றாக்குறையால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தினூடாக தற்போது நீர் வழங்கலைப் பெறுகின்ற பாவனையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) புதிதாக நீர் வழங்கலைப் பெற விண்ணப்பித்துள்ள பாவனையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) வடக்கு எக்னெலிகொட சமூக நீர் வழங்கல் திட்டத்தை அரசாங்கம் பொறுப்பேற்று வினைத்திறனான வகையில் பிரதேச மக்களுக்கு குடிநீரை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் அதற்கு எடுக்கும் காலம் யாதென்பதையும்;

(iii) அதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?